BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# சீறாப்புராணத்தில் கனவுகள்

# Dreams in Seerapuranam

**அ.ஹாஜிரா பேகம்**

முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை, முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி(த), வேலூர்.

**A.Hajira Begum**

Ph.D. Scholar(Part Time), Department of Tamil, Muthurangam Govt Arts College(A), Vellore.

**Abstract**

From ancient times, Humans have had the practice of believing in dreams and interpreting their outcomes. Dreams are the inside expression of the mind. Although poets have generally used dreams in literary works for aesthetic pleasure, they also play a significant role in advancing the narrative to the next stage, providing indications of the future and highlighting the importance of characters. Based on this, the present article is written with “Dreams in the Seerapuranam” as its Central theme.

**Key words:** Dream, Epic, Trust, Inference,

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதர்கள் கனவில் நம்பிக்கைக் கொண்டு தாம் பார்த்த கனவிற்கான பலன் கேட்கும் பழக்கம் பழங்காலத்திலிருந்தே இருக்கிறது. உள்ளத்தின் உள்வெளிப்பாடு தான் கனவாக அமைகிறது. பெரும்பாலும் கனவுகள் இலக்கியங்களில் இலக்கிய சுவைக்காகப் புனையப்பட்ட கதைகளாக புலவர்கள் பயன்படுத்தியிருந்தாலும், கதையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கும், எதிர்காலக் குறிப்புகளைத் தருவதற்கும், பாத்திரங்களின் முக்கியத்துவத்திற்கும் பெரும்பங்கு வகிக்கின்றன. இஸ்லாமியர்களால் பலவகையான இலக்கியங்கள் இயற்றப்பட்டிருந்தாலும் தனித்தன்மையாக விளங்கும் சீறாப்புராணத்தில் இடம் பெற்றுள்ள கனவுகள் குறித்து இக்கட்டுரை ஆய்வு மேற்கொள்கிறது.

**திறவுச் சொற்கள்:** கனவு, காப்பியம், நம்பிக்கை, குறிப்பறிதல், இறைத் துதர்,

**முன்னுரை**

தமிழ் காப்பிய உலகில் உமறுப்புலவருக்கு முன்பே காப்பிய இலக்கியத்திற்கான, இலக்கணம், மரபுகள் கோட்பாடுகள் அனைத்தும் வரையறை செய்யப்பட்டு விட்டடன. தமிழில் தோன்றிய முதல் காப்பியமான சிலப்பதிகாரம் முதல் இன்றுவரை இலக்கியங்களில் காப்பியங்கள் குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுள்ளன. இறைவனால் அனுப்பப்பட்ட இறுதித் தூதரான நபிகள் நாயகத்தின்(ஸல்) வரலாற்றைக் காப்பியமாக இயற்றினார் உமறுப்புலவர். தமிழ்க் காப்பிய இலக்கணத்தையும், மரபையும் பின்பற்றி இயற்றியுள்ளார். காப்பிய மரபில் ஒன்றாக கனவு நிகழ்ச்சி இடம்பெறுகிறது. அதனடிப்படையில் சீறாப்புராணத்தில் இடம்பெற்றுள்ள கனவு குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சீறாப்புராணம்**

சீறாப்புராணம் என்பதிலுள்ள “சீறத்“ என்ற அரபு சொல்லுக்கு வரலாறு என்று பொருள். இக்காப்பியம் நபிகள் நாயகத்தின்(ஸல்) வரலாற்றைக் கூறுவதால் சீறாப்புராணம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களின் இறுதித் தூதரான நபிகள் நாயகம்(ஸல்) சவுதி அரேபியா நாட்டில் மக்கா நகரில் பிறந்து அவருடைய 40 ஆவது வயதில் இறைவனின் தீர்க்கதரிசனம் கிடைக்கப்பெற்றது. 53 வயது வரை மெக்காவிலும் அதன்பின் மதீனா நகரத்திற்கு இடம்பெயர்ந்து 63 வயதில் இயற்கை எய்தினார். சீறாப்புராணத்தில் 58 வயதுவரையிலான வரலாற்றை விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என மூன்று காண்டங்கள் 92 படலங்கள் 5027 விருத்தப் பாடல்களால் பாடப்பட்டுள்ளது.

**இலக்கியமும் கனவும்**

நம்முடைய உடல் உறங்கிவிட்டாலும் உள்ளம் உறங்குவதில்லை. ஆழ்ந்த உறக்க நிலையில் மனத்தினரால் தோன்றும் காட்சியே கனவு எனப்படும். நம்முடைய எண்ணங்களே கனவுகளாக வெளிப்படுகின்றன என்பர் உளவியலாளர், அடிமனத்தில் தோய்ந்த எண்ணங்களின் விளைவுகளும் இடைவிடாத நினைவுகளும் கனவுகளாக வரும் என்பர் ச.தண்டபாணி தேசிகர்.கனவு கண்டுரைத்தல் தலைவன் தலைவியர்க்கு உரித்தாகும் என்பதை,

*கனவும் உரித்தால் அவ்விடத்தான்*

*(தொல்-பொரு-நூ-195)*

என்றும், தலைவன், தலைவி பிரிவில் ஏற்படும் மெய்பாடுகளை கூறும் போது, நீங்காத நினைவுக்கும் வேறுபாடு தெரியாமல் இருப்பதை,

*கண்துயில் மறுத்தல் கனவோடு மயங்கல்*

*(தொல்-பொ-நூ-266)*

என்றும் கனவு குறித்து தொல்காப்பியம் கூறுவதை அறியமுடிகிறது. *”வாழ்வியல் நிகழ்வுகளை ஏற்க இயலாத சூழலில் உள்ளம் தனிச்சையாக ஒரு கற்பனை விளையாட்டில் ஈடுபடுகின்றது. உலகையும், வாழ்வையும் உள்ளம் விரும்புமாறு படைத்துக்கொண்டு மனம் தம் போக்கில் மகிழ்கின்றது. இதனைப் பகற்கனவு என்று திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர்” (உளவியல் துறைகள்-இரண்டாம் தொகுதி-ப-343)*

கனவுகள் பெரும்பாலும் காப்பியங்களில் கதை வளர்ச்சிக்கும் எதிர்கால நிகழ்வுகளை உணர்த்துவதற்கும் பயன்படுகின்றன. மேலும் பாத்திரங்களின் எண்ணங்கள், ஆசைகள், அச்சங்களை வெளிப்படுத்துவதற்கும் காப்பியங்களில் கனவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சீறாப்புராணத்தில் நபிகள் நாயகத்தின் (ஸல்) தாய் ஆமினா (ரஜி) கண்ட கனவு, மனைவி கதீஜா (ரஜி) கண்ட கனவு, நபிகள் நாயகம் (ஸல்) கண்ட கனவு என மூன்று வகை கனவுகள் சீறாப்புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஆமினா (ரஜி) கனவு**

நபிகள் நாயகத்தின் (ஸல்) தாயாரான ஆமினா (ரஜி) அறத்தின் உறை விடமாகவும், அருள் குடியிருக்கும் இல்லமாக விளங்கியவர். இவருக்கும் மக்கமா நகரத்தில் குறைஷிக் குலத்தைச் சேர்ந்த அப்துல்லாவுக்கும் திருமணம் நடைபெற்று இனிதாக இல்லறம் நடத்தி வந்தபோது ஆமினா (ரஜி) அவர்கள் முகம்மது நபியைக் கருவாக தரித்தார்கள். அவர்கள் கருப்புற்றிருந்த காலத்தில் ஒவ்வொரு மாதமும் ஒரு நபிமார் அவருடைய கனவில் தோன்றி கருவில் வளரும் குழந்தை முகம்மது என்றவித்தனர்.

முதல் மாதத்தில் ஆதம் நபி, இரண்டாம் மாதத்தில் இதிரீசு நபி, மூன்றாம் மாதத்தில் நூகு நபி, நான்காம் மாதத்தில் இபுராஹீம் நபி, ஐந்தாம் மாதத்தில் இசுமாயில் நபி, ஆறாம் மாதத்தில் மூசா நபி, ஏழாம் மாதத்தில் தாவுத் நபியும், எட்டாம் மாதத்தில் சுலைமான் நபியும், ஒன்பதாம் மாதத்தில் ஈசா நபியும் ஆமினாவின்(ரஜி) கனவில் தோன்றி வளரும் குழந்தை முகம்மது என்று தெரிவித்தனர் (சீறா-நபியவதார-பா:190-200).

நபி பெருமானார்(ஸல்) பிறப்பதற்கு முன்னே இறைவன் நபித்துவத்தின் அடையாளத்தை காட்டியுள்ளான் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இறைவனால் நிகழ்த்தப்பட்ட இந்த கனவானது உமறுப்புலவரின் சீறாப்புராணத்தில் காப்பிய மரபான பின் வருவதை முன்பே கூறும் உத்திக்கு பொருத்தமாக உள்ளது.

**கதீஜா (ரஜி) கனவு**

மக்கா நகரில் மிகுந்த செல்வம் கொண்டு வணிகம் செய்பவர்களுக்கெல்லாம் பொருள் உதவி செய்து வந்த குவைலிது என்பவரின் மகள் தான் கதீஜா பெருமாட்டியார். நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அவருடைய பெரிய தந்தை வணிகம் செய்வதற்கு தேவையான பணம் இல்லாததால் குவைலிதிடம் பொருள் பெற்று தொழில் தொடங்குவோம் என்று கூறிய அன்றைய இரவு கதீஜா பெருமாட்டி, நட்சத்திரங்களுடன் ஊர்ந்து சென்ற நிலவுதம் மடியில் மகிழ்ந்து விளையாட, அதைத் தன் முந்தானையால் போர்த்து எடுத்து மார்டபோடனைத்து மகிழ்ந்ததாகக் கனவு கண்டார் என்பதை,

*நிறையும் வானக மரல்தரு முடுவின நிரைவிடுத் தெளிதாகக்*
*கறையி லாக்கலை முழுமதிமடிமிசைகவினொடு விளையாட*
*மறைவி லாதுகண் டணிதுகில் கொடுதனி -*
*மகிழ்வோடுபொதிவாகக்*
*குறைவி லாதுரத் துடனணைக் கவுமகங் குளிரவு மிகத்தானே*
*(சீறா-பாதை போந்த-பா:648)*

என்று ஆசிரியர் பாடுகின்றார். கனவின் பலனைக் கூறுகின்ற ஊசா என்பவர் மக்கமா நகரில் தோன்றி தீன் நெறியைத் தழைக்கச் செய்யும் நபியாக விளங்க இருப்பவர் முகம்மது(ஸல்)! கலை நின்ற மதி மடியிலிருப்பது போல் கதீஜா(ரஜி) கண்டது, அவர் அந்நபிக்கு மனைவியாகிச் சிறப்படைவார் என்று கூறியது இக்கனவிற்கான பயனும் சீறாப்புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் சீறாப்புராணத்தில் கதீஜா கனவு காண் படலம் என கனவிற்காக தனி படலம் வைக்கப்பட்டுள்ளது. இதில் வானவர்கள் முகம்மதுவின்(ஸல்) திருமேனியில் மணம் மிகுந்த மாலைச் சூட்டி அணிமணிகள் புட்டி அரியணையில் அமர்த்தி ஒட்டகத்தின் மீது அமர்ந்து உலா வரும் போது வானவர்கள் பொன்மழை பொழிந்ததாகக் கனவு கண்ட கதீஜா (ரஜி) பெருமாட்டியார் அண்ணலாரின் அடிமலர்களைப் பணிந்தது போன்று கனவு கண்டதாக (சீறா-கதீஜா கனவு –பா:15) உமறுப்புலவர் பாடியுள்ளார். அதோடு நபிகள் நாயகம்(ஸல்) ஷாம் நகரத்திற்கு வணிகத்திறகாகச் சென்றிருந்த போது அவருடைய நினைவில் இருந்த பெருமாட்டியார், ”மாணிக்க மரம், வைர வேர், இரத்தினக் கிளைகள், மரகத இலைகள் வானளாவி நின்று கனிகளை உதிர்த்து பு மணம் எங்கும் பரப்பி பெருமாட்டியின் தலையில் புக்களைச் சொரிந்ததைப் போன்று தூங்கும் போது கண்ட கனவை,

*வானம்மட்டு ஓங்கி நீண்ட மாணிக்கத் தருவின் பொற்பு*
*நானில முழுதும் விண்ணும் நறைகமழ்ந் திடுவ நோக்கித்*
*தேனமர் குழலி னாருஞ் செல்வரும் பெரிது போற்றப்*
*பானலங் கடந்த கண்ணார் பயனுறுங் கனவு கண்டார்*
*(சீறா-மணம பொருத்து-பா:21)*

என்ற பாடலில் காட்டப்பட்டுள்ளது. விழித்து எழுந்த பிறகு பெருமாட்டியார் உறக்கத் என்பவரிடம் முழு கனவையம் கூறி அதன் பயனைக் கேட்டபோது

*இருநிலத்து உறைந்த வேர் ஈமான்நிலை எழுந்து நின்ற*
*தரு, முகம்மது,நல் வாசம் தழைத்தல்தீன் விளக்கம், இன்பம்*
*வருகனி கலிமா, வாழ்த்து வானவர் செயல், புமாரி தெரிதரச்*
*சொரிதல் உம்மைத் திருமணம் முடித்தல் என்றான்*
*(சீறா-மணம் பொருத்து – பா:25)*

என்று, பின்னாளில் நபிகள் நாயகம்(ஸல்) கதீஜா (ரஜி) பெருமாட்டியார் திருமணம் நடைபெறும் என்பதை முன்னமே தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார்.

**நபிகள் நாயகம்(ஸல்) கண்ட கனவு**

நபிகள் நாயகம்(ஸல்) நபித்துவம் பெறுவதற்கு முன்பும், பின்பும் இறைத்தூதர் என்பதால் பின்னால் நடக்கவிருப்பதை முன்பே கனவாக இறைவன் காட்டியுள்ளார். ஷாம் நகரத்தில் ஒரு மலையடிவாரத்தில் முகமதுவும் அவருடைய வணிகக் கூட்டமும் தங்கியிருந்த போது, அங்கு இருக்கும் கள்வர்களை நினைத்து கூட்டத்தினர் பயந்தனர். நபிகள் நாயகமோ (ஸல்) பயப்பட வேணடாம் என்று ஆறுதல் கூறினார். அன்றைய இரவு நபி பெருமானார் (ஸல்), மலையிடத்தில் ஆறு பெருக்கெடுத்து ஓடியதால் கள்வர் வணிகர் கூட்டத்தை நெருங்க முடியாமல் விலகிச் சென்றதைப் போன்று கனவு கண்டார். காலையில் அவ்வாறே நதி பெருக்கெடுத்து ஓடி கள்வர்கள் நெருங்க முடியாமல் போனதை,

*சோராருண்டென மணந்துணுக் குறல்சுடர் வரையி*
*னேர தாயொரு நதியுள நிலஞ்சுழித் தெழுந்து*
*கோர மாய்வருங் கள்ளருங் குறுகிடா ரெனவே*
*காரெ ழுங்குடைமுகம்மது கனவுகண் டனரே*
*(சீறா-கள்வரை நதி-பா:05)*

என்ற பாடலடியில் காணமுடிகிறது. மேலும் அவருக்கு நபித்துவம் கிடைக்கின்ற போது, நாள்தோறும் புதிய புதிய கனவுகள் தோன்றும். தோன்றிய கனவுகள் அனைத்தும் மறுநாள் உண்மையாக நடக்கும். ”இறை நம்பிக்கையாளரின் கனவு நபித்துவத்தின் நாற்பது பாகங்களில் ஒரு பாகமாகும்.அதனை அவர் பிறரிடம் கூறாதவரை பறவையின் காலில் கட்டப்பட்டவற்றைப் போன்று நிம்மதியற்று இருப்பார். அதனை அவர் பிறரிடம் கூறி விளக்கம் பெற்று விடின், அவருடைய பாரம் நீங்கிவிடும் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்”(அறிப்பவர். அபு ரஜீனில் உகைலீ(ரலி), ஆதாரம்.,அபு தாவுத், திர்மிதி 1304- அல்ஹதீஸ் (முதற்பகுதி), யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் அண்ட் புக் செல்லர்ஸ், சென்னை-1,பக்.500). நபிகள் நாயகத்திற்கு(ஸல்) அவருடைய குலத்தைச் சார்ந்தவர்களான குறைஷி குலத்தைச் சார்ந்தவர்களே பகைவர்களாக இருந்தனர். நபிகள் நாயகம்(ஸல்) மதீனாவில் இருக்கும் போது குறைஷிகள் “உஹத்“ என்ற இடத்தில் படையெடுத்து வந்தனர். “உஹத்“ என்ற பகுதி மதீனாவில் இருந்து 3 கி.மீ தூரத்தில் உள்ளது. உஹத் போர் நடைபெறுவதற்கு முன் நபிகள் நாயகத்திற்கு(ஸல்),

*கேடில் முன்றிலில் பசு அறுத்து இவண்கிடப் பவும், போர்*
*ஆடல் வாளின்வாய் தாரைசற்று அறஉதிர்ந் திடவும்*
*மூடும் என்னுடல் சோட்டினில் கரம்முழு கிடவும்*
*ஏடலும்புயத் தீர் இலை காண்டனன் இயைப*
*(சீறா-உகுது-பா:53)*

என்ற கனவு தோன்றுகிறது. பசு அறுக்கப்பட்டு கிடந்ததால், தோழர்கள் சிலர் இறப்பர். வாள்முனை சிறிது முறிந்து விட்டதால், எதிரிகளைத் தாக்கும் போது இறக்கலாம். கைகள் மேலங்கிக்குள் நுழைந்து மறைந்ததால் உடலில் துன்பம் ஏற்பட்டு இரத்தம் வடியும் . ஆனாலும் நாம் தான் வெற்றி பெறுவோம் என்று தான் கணவில் கண்டதையும் அதனால் ஏற்படும் இழப்புகள் குறித்தும் தன் தோழர்களிடம் நபி பெருமானார் (ஸல்) கூறினார். கனவில் அவர் காண்டதைப் போலவே, உஹத் போரில் அவருக்கு வெற்றி கிடைத்தது. இந்த கனவுகள் அனைத்தும் இறைவனால் நிகழ்த்தபட்டு இயற்கையாக அமைந்தவையாகும். இவை உமறுப்புலவரின் சீறாப்புராணத்தில் வரலாற்றோடு காப்பியச் சுவையை அதிகரிப்பதற்கு பெரும் பங்காற்றியுள்ளன என்பது அறியலாகிறது.

**முடிவுரை**

காப்பியங்களில் காணப்படும் கனவுகள் ஆசிரியர்களால் காப்பிய மரபுக்காகப் புனையப்பட்டதாக இருக்கும். ஆனால் சீறாப்புராணத்தில் காட்டப்பட்டுள்ள கனவுகள் அனைத்தும் இயற்கையாக இறைவனால் உண்டாக்கப்பட்டவையே. பெரும்பாலான கனவுகள் எதிர்கால நிகழ்வுகளைக் காண்பிப்பவைகளாகவே உள்ளன. மேலும் கனவின் பலன் பார்க்கும் பழக்கம், கனவிற்கு விளக்கம் அளிக்கும் நிகழ்வும் நபி பெருமானார்(ஸல்) காலத்திலேயே நிகழ்ந்துள்ளதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1.சீறாப்புராணம் மூலமும் பொழிப்புரையும், உரையாசிரியர் மகாமதி சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர், யுனிவர்சல் பப்ளிஷிங்

2. தொல்காபப்பியம் (எழுத்து,சொல்,பொருள்), கௌரா பதிப்பகக் குழுமம்

3. உளவியல் துறைகள்- இரண்டாம் தொகுதி,இராசமாணிக்கம், தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.